REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2021 பெப்ரவரி 2 செவ்வாய்க்கிழமை

வரு. 89 இல. 28 | Tuesday, February 2, 2021 | 16 பக்கங்கள் | 30/-






உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் நேற்று கையளிக்கப்பட்டபோது...

270 பேர் பலியான உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

## 472 பக்கங்களை கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

**214 நாட்களில் 457 பேரிடம் விசாரணைகள் பதிவு**

**மைத்திரி, ரணில், முன்னாள் IGP உட்பட பலரிடமும் வாக்குமூலம் பதிவு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு நேற்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தமது இறுதி அறிக்கையை உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளது.

நேற்றைய தினம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து மேற்படி ஆணைக்குழுவின் தலைவர் உச்சநீதிமன்ற நீதிபதி ஜனக் டி சில்வா அந்த அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பான முதலாவது இடைக்கால அறிக்கை 2019 டிசம்பர் 20ஆம் திகதியும் அதனையடுத்து இரண்டாவது இடைக்கால அறிக்கை கடந்த வருடம் மார்ச் 2ஆம்

06

## கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை






அ

வ

**வெளிநாட்டிற்கோ, சர்வதேச நிறுவனத்திற்கோ வழங்கப்போவதில்லை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

**தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பில் பிரதமர் தெரிவிப்பு**

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் உரிமை மற்றும் கட்டுப்பாட்டை வெளிநாட்டிற்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்து கிழக்கு முனையத்தை பாதுகாக்கும் தொழிற்சங்க கூட்டமைப்பு எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இச்சூழ்நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை

06



## மேல் மாகாண பாடசாலைகளில் அன்டிஜன் பரிசோதனை ஆரம்பம்

**எழுந்தமானமாக இடம்பெறும் என்கிறார் ஜீ.எல். பீரிஸ்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் எழுந்தமானமாக அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அதற்கிணங்க நேற்று முதல் அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த செயற்திட்டத்தில் முதற்கட்டமாக நேற்றைய தினம் ராஜகிரி ஜனாதிபதி வித்தியாலயத்தில் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எழுந்தமானமாக தொடர்ந்தும் இந்த பரிசோதனை

06

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தொடர்பான

## ஜனாதிபதி ஆணைக்குழுவை தமிழ் கூட்டமைப்பு நிராகரிக்கும்



ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஜனாதிபதி ஆணைக்குழுவை நிராகரிக்கும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டம் நிறைவு பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

நேற்றைய கூட்டத்தில் விஷேடமாக வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் நில அபகரிப்பு வெவ்வேறு வடிவங்களில்

06

## 1000 ரூபா சம்பள உயர்வு கோரி வேலை தவிர்ப்பு போராட்டம்



**நாடளாவிய ரீதியில் 05ஆம் திகதியன்று ஏற்பாடு**

**கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்**

தோட்டக் கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் மலையக மக்கள் எதிர்வரும் 5ம் திகதி நாடு தழுவிய ரீதியில் ஒருநாள் அடையாள வேலை தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் ஊவா மாகாண முன்னாள் அமைச்சருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

தோட்டத்தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள பிரச்சினை குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமிய பவனில்

06

## யுத்தகால வீடியோ பதிவை டுவிட்டரில் பதிவு செய்த மனித உரிமைகள் அலுவலகம்

**பக்கச்சார்பான செயலென அமைச்சர் தினேஷ் கடும் கண்டனம்**



ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் டுவிட்டரில் இலங்கை குறித்து வெளியிட்ட பதிவில் யுத்தகாலத்தில் இடம்பெற்ற காட்சிகளின் வீடியோவையும் இணைத்து பதிவு செய்தமைக்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கை கடந்தகால மனித உரிமை மீறல்களிற்கு தீர்வை காணத் தவறியதன் காரணமாக மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறும் ஆபத்து அதிகரித்துள்ளது என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் டுவிட்டர் செய்தியொன்றில் தெரிவித்துள்ளதுடன்

06

## சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம்

**கமல் குணரத்ன தெரிவிப்பு**



இலங்கையின் 73வது சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியில் மாத்திரமே தேசிய கீதம் இசைக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று

06

## யானையை வைத்திருந்த நீதவான் மீதான வழக்கு

**மார்ச் மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு**

அனுமதிப்பத்திரமின்றி யானை குட்டியொன்றை பராமரித்து வந்த

அமைச்சர் பவித்ரா தொடர்பாக பொய் பிரசாரம்;

## சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு அறிவிப்பு

அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தொடர்பாக சமூக வலைத்தளங்களில்

தோட்டத் தொழிலாளர் 1000 ரூபா சம்பள பிரச்சினை;

## இரண்டு வாரங்களுக்குள் தீர்வு தர தொழில் ஆணையாளர் உறுதியளிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

றுக்கொள்ள முடியுமென

## அமைச்சர் பந்துலவிற்கு கொவிட் தொற்றில்லை

அமைச்சர் பந்துல குணவர்தனவிற்கு கொரோனா தொற்று உறுதியாக